**25.01.2020**

## பத்திரிக்கை செய்தி

## மெட்ரோ இரயில் நிலையங்களில் ஓவியப் போட்டி 02.02.2020 அன்று நடைபெறுகிறது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை கலைப்பள்ளியுடன் இணைந்து நடத்தும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான ஓவியப் போட்டி பிப்ரவரி 2, 2020 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சென்ட்ரல் மெட்ரோ, எழும்பூர் மெட்ரோ, செனாய் நகர், அண்ணா நகர் கோபுரம், கோயம்பேடு, வடபழனி, அசோக் நகர், பரங்கிமலை, விமான நிலையம் மெட்ரோ, சைதாப்பேட்டை மெட்ரோ, தேனாம்பேட்டை, ஆயிரம் விளக்கு, அரசினர் தோட்டம், மண்ணடி, வண்ணாரப்பேட்டை மெட்ரோ ஆகிய 15 மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறுகிறது.

“மெட்ரோ இரயில்” அல்லது “மெட்ரோ நிலையம்” அல்லது “மெய்நிகர் உண்மை” என்கின்ற தலைப்புகளில் போட்டிகள் நடத்தப்படும். ஒவ்வொரு மெட்ரோ நிலையத்திலும் 20 சிறந்த ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றிற்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் அன்று (02.02.2020) மதியம் 1.00 மணிக்கு வழங்கப்படும். “சிறந்த கலைஞர் விருது -2020” தேர்ந்தெடுக்க, ஒவ்வொரு மெட்ரோ நிலையத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 ஓவியங்கள் மெட்ரோ பயணிகள் வாக்களிப்பதற்காக 15 மெட்ரோ நிலையங்களிலும் 03.02.2020 முதல் வைக்கப்படும். பிப்ரவரி 9, 2020 (ஞாயிற்றுக்கிழமை) சென்ட்ரல் மெட்ரோவில் பிற்பகல் நடத்தப்படும் விழாவில் வெற்றியாளர்களுக்கு ரொக்கப்பரிசும், சான்றிதழும் வழங்கப்படும்.

சார்ட் பேப்பர் (1/4 அளவு) சென்னை கலைப்பள்ளியால் வழங்கப்படும். ஓவியப் போட்டிக்கு தேவையான கலைப் பொருட்களைக் கொண்டு வருமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் தங்கள் பெயர்களை இன்று முதல் www.chennaiartschool.com என்ற இணையதளத்தில் பதிவு செய்யலாம். அல்லது ஜனவரி 29, 2020 முதல் 7448822099 என்ற வாட்ஸ்அப் எண் மூலம் அவர்களின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு எண் ஆகியவற்றை பதிவு செய்யலாம்.

**பிரிவுகள்:**

குழு A - 1 முதல் 3 ஆம் வகுப்பு
குழு B - 4 முதல் 6 ஆம் வகுப்பு
குழு C - 7 முதல் 9 ஆம் வகுப்பு
குழு D - 10 முதல் 12 ஆம் வகுப்பு
குழு E - கல்லூரி மாணவர்கள்